தோழர் அம்பில் தர்மலிங்கம் வெற்றி

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்

சென்னை: புரட்டாசி 23உ சனி (9—10—54) | மலர்: 2
வெளியூர்: புரட்டாசி 24உ ஞாயிறு (10—10—54) | இதழ்: 101

நாகர்களின் குடியரசு தோற்றம்?

பர்மா எல்லையில் 5000 சதுர மைல் கொண்ட தனி அரசு!

ஓங்கின் என்பவர் தலைமையில் புதிய ஆட்சி!

பதினைந்து நபர்கள் கொண்ட அமைச்சர் குழு

ஷில்லாங், அக் 8—

இந்திய யூனியன் நிர்வாகத்திற்குள் இன்னமும் கொண்டு வரப்படாது இருக்கும், பர்மா எல்லோரத்தில் உள்ள 5,000 சதுர மைல் பரப்புள்ள நாகர் வாழும் நிலப்பரப்பில், புதியதோர் நாகர் குடியரசு தோன்றி இருக்கிறது எனத் தெரிய வருகிறது.

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற ஓங்கின் என்ற நாகர் தலைவர், புதிய குடியரசின் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக்கொண்டுள்ளார். அவருக்குத் துணையாக 15 நாகர்களைக் கொண்ட ஒரு அமைச்சர் குழுவும் அமைக்கப்பட்டு இருக்கிறது.

இந்தச் செய்தி இன்னமும் இந்திய சர்க்கார் சார்பில் உறுதி செய்யப்படவில்லை.

இந்தியாவின் கிழக்கு எல்லைப்புறத்தில் நாகர் மக்கள் தொடர்ந்து வசித்து வரும் பகுதியில் உள்ள காண்டேஜ் என்ற கோட்டை வெளியில், நாகர் குடியரசின் தலைமை அலுவலகமிருந்து வருகிறது.

இந்திய யூனியனில் உள்ள நாகர்கள் வசிக்கும் பகுதிக்கு தன்னாட்சி கோரிக் கொண்டிருக்கிற நாகர் தேசியக் குழுவின் பக்க பலம், புதிய நாகா குடியரசுக்கு முழு அளவில் இருப்பதாக நம்பப்படுகிறது.

லண்டனில் மாபெரும் வேலை நிறுத்தம்!

23,000 துறைமுகத் தொழிலாளர் ஈடுபட்டுள்ளனர்!

இந்தியத் தொழிலாளர் இறக்குமதி செய்யப்படுவதற்கு எதிர்ப்பு

லண்டன், அக். 7—

இங்குள்ள துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்களல்லவா? 'குசான்' என்ற கப்பலில் லிவர்பூல் துறைமுகத்திலிருந்து இந்தியர்கள் சிலரைத் துறைமுக வேலைகளைக் கவனிப்பதற்காகக் கொண்டு வந்ததை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் வன்மையாகக் கண்டித்தனர் எனத் தெரிகிறது.

இந்தச் சம்பவத்தினால் கொதிப்படைந்த தொழிலாளர்கள் கண்டனக் கூட்டங்கள் கூட்டி, துறைமுகத்தையே நிலை குலையச் செய்வோம் என அச்சுறுத்துகின்றனராம்.

வேறு இடங்களிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்து வேலைகளைக் கவனிப்பதை பலரும் கண்டிக்கின்றனர்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள துறைமுகத் தொழிலாளர்களின் எண்ணிக்கை இன்று 23,000 மாக உயர்ந்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தியத் தொழிலாளர்களை லிவர்பூலிலிருந்து கொண்டு வருவது வெளிநாடுகளிலிருந்து கருங்காலிகளைக் கொண்டுவருவதற்குச் சமமானதாகும் என்று ஒரு தொழிலாளி கூறினார்.

கப்பல்கள் வேறு துறைமுகங்களுக்குத் திருப்பப்படுகின்றன. ஏற்றுமதிக்கு தனி பொருள்களை தற்காலிகமாக லண்டனுக்கு அனுப்ப வேண்டாமென வியாபாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வேலை நிறுத்தத்திற்கு முன்பு ஏற்றுமதிக்காக அனுமதிக்கப்பட்ட ஏராளமான கார்கள் இதர சாமான்கள், கப்பலிலேற்ற தொழிலாளர்கள் இல்லாததால் துறைமுகத்திலேயே தங்கியுள்ளனவாம்.

நிலைமை முற்றுமானால், லண்டன் துறைமுகம் முழுவதும் அப்படியே முடப்பட்டுவிடக் கூடும் என்ற அச்சமும் இருக்கிறதாம்.

சேலம் ஜில்லா போர்டு தேர்தல்

எடப்பாடி தொகுதியில் தோழர் தாண்டவன் வெற்றிபெற்றார்

சேலம், அக். 9—

சேலம் ஜில்லா போர்டு தேர்தலில் எடப்பாடி தொகுதியில் சுயேச்சை அபேட்சகர் தோழர் இரா. தாண்டவன் வெற்றி பெற்றார்.

தோழர் இரா. தாண்டவன் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு உறுப்பினர் ஆவார். அண்மையில் நடைபெற்ற சேலம் மாவட்ட இரண்டாவது தி. மு. கழக மாநாட்டில் அவர் தொண்டர் படைத் தலைவராக இருந்து பணியாற்றினார்.

வாக்குகள் விபரம்

இரா. தாண்டவன் (சுயே)	6,250
டி. அருணாசலம் (காங்)	3,699
என்.என். குப்புசாமிபத்தர் (பி.எஸ்.பி.)	1,591

செங்கற்பட்டு ஜில்லா போர்டு தேர்தல்!

தோழர் எம். பி. ராதாகிருஷ்ணன் வெற்றி!

மதுராந்தகம், அக். 4—

செங்கற்பட்டு ஜில்லா போர்டு தேர்தலில் [illegible] தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக அனுதாபியான எம். பி. இராதாகிருஷ்ணன் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

வாக்குகள் விபரம்

எம். பி. இராதாகிருஷ்ணன் (சுயே)	5,639
கே. சுப்பராய முதலியார் (காங்)	4,961
குப்புசாமி (சுயே)	480
கோபாலையர் (பி. எஸ். பி)	401
செல்லாதவை	1,055

தோழர் வ.எல்.சி.கிருஷ்ணசாமி வெற்றி

வட ஆற்காடு மாவட்டக் கழகத் தேர்தல் முடிவு

அரக்கோணம், அக். 2—

வடாற்காடு ஜில்லா போர்டுக்கான தேர்தலில் [illegible] தொகுதியில் சுயேச்சை அபேட்சகர் தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்து மூன்று பேர் போட்டியிட்டனர். தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி வடாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஆவார்.

வாக்குகள்

ஏ. எல். சி. கிருஷ்ணசாமி (சுயே)	2,234
கே. முருகேசன் (காங்.)	2,008
திருமதி புஷ்பம்மாள் (சுயே)	966
ரெங்கசாமி நாயுடு (சுயே)	86
செல்லாதவை	75

ராஜா சிதம்பரம் பதவி வேட்டைக்குச் சாவுமணி

பல ஆண்டு காலமாக இருந்த ஜில்லா போர்டு ஆதிக்கத்திற்கு முடிவு

கம்யூனிஸ்டு அபேட்சகர் உள்பட நால்வர் ஜாமீன் இழந்தனர்

1,215 வாக்குகள் அதிகம் பெற்று தர்மலிங்கம் வெற்றியடைந்தார்!

கட்சி மாறும் போக்குக்கு லால்குடி வாக்காளர்கள் தந்த தீர்ப்பு

★

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரான தோழர் அம்பில் தர்மலிங்கம், திருச்சி மாவட்ட ஜில்லா போர்டு தேர்தலில், லால்குடி தொகுதியில், 7,674 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

தோழர் அம்பில் தர்மலிங்கம் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரும், திருச்சி ஜில்லா போர்டின் முன்னாள் தலைவரும், தற்போதைய சென்னை சட்ட சபை உறுப்பினருமான தோழர் பி. பி. கே. ராஜா சிதம்பரம் அவர்களுக்கு 6,459 வாக்குகள் கிடைத்தன.

இந்தத் தேர்தலில் போட்டியிட்ட மற்ற நான்கு அபேட்சகர்களில் ஒருவர் கம்யூனிஸ்டு கட்சி அபேட்சகரும், மற்ற மூவரும் சுயேச்சை அபேட்சகர்களும் ஆவர்; இவர்கள் நால்வரும் ஜாமீன் தொகையை இழந்திருக்கின்றனர்.

தேர்தலில் வெற்றி பெற்ற தர்மலிங்கம் அவர்களை பல்லாயிரக் கணக்கான தோழர்கள் ஏராளமான மலர் மாலைகளை அணிவித்து, லால்குடி தாசில்தார் அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

நேற்று காலை 8-30 மணியிலிருந்து இரவு 10-30 மணி வரையில் லால்குடி தாலுகா அலுவலகத்தில் வாக்குகள் எண்ணப்பட்டு, தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது.

இத்தேர்தலில் தோழர் அம்பில் தர்மலிங்கம் அவர்களைத் தேர்ந்தெடுத்ததின் மூலம் பதவிக்காகக் கட்சி மாறும் போக்கைக் கண்டித்து நல்ல தீர்ப்பு வழங்கியிருக்கின்றனர்.

இத்தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்ட தோழர் ராஜா சிதம்பரம் அவர்களின் குடும்பத்தினர் கடந்த பல ஆண்டுகளாக திருச்சி ஜில்லா போர்டில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். இதற்கு முன்னர் அங்கு நடைபெற்ற தேர்தல்களில், தோழர் ராஜா சிதம்பரம், சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டு காங்கிரஸ் அபேட்சகரான தோழர் ஜி வரதராச பிள்ளை அவர்களை இருமுறை எதிர்த்து இருமுறையும் வெற்றி பெற்றார்.

இந்த ஜில்லா போர்டு தேர்தலில் தோழர் ராஜா சிதம்பரம் காங்கிரசின் சார்பாகப் போட்டியிட்டு, 'காங்கிரஸ் கட்சிதான் நாட்டிற்கு நல்லது செய்யும் கட்சி' என்று பிரசாரம் செய்தார்.

தோழர் அம்பில் தர்மலிங்கம் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டார்; பண பலமும், பதவி பலமும் அற்ற தர்மலிங்கம் அவர்களை தனிப்பட்ட முறையில் தி. மு. கழகத் தோழர்கள் ஆதரித்தனர்.

இந்தத் தேர்தலில் லால்குடி வாக்காளர்கள் தக்க தீர்ப்பு அளித்துள்ளனர்; நினைத்தபோது கட்சி மாறும் போக்கை அவர்கள் கண்டித்திருப்பதுடன், அரசியல் வாழ்வில் கண்ணியம் தேவை என்பதையும் தங்கள் தீர்ப்பின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளனர்.

வாக்குகள் விபரம்

பதிவான வாக்குகள்	19,1..
ஏ. பி. தர்மலிங்கம் (சுயேச்சை)	
பி பி கே. ராஜா சிதம்பரம் (காங்கிரஸ்)	
எம். நடராச	
நாரு (கம்	
மணி ஐயர்	
மாரிமுத்	
செல்ல	

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 9—10—54 சனி

சீனிவாசன் திட்டம்!

மதுரை பார்ப்பனர் இளைஞர் சங்கத்தில் பேசிய 'சுதேசமித்திரன்' ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன், "அரசாங்க உத்தியோகங்களில் ஈடுபடுவது தான் தங்கள் கடமை என்ற எண்ணத்தைப் பிராமணர்கள் முதலில் கைவிட வேண்டும்," என்று, பார்ப்பனக் குடிமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்தகைய ஒரு வேண்டுகோளுக்கு, இன்றைய சூழ்நிலையில் துளி அவசியமும் இல்லை என்பதை, மற்றவர்களைப்போலவே சீனிவாசனும் அறிந்தே இருக்கிறார். பிற சமூகத்தினருக்கும், அவருடைய பார்ப்பன சமூகத்தினருக்குமிடையில் நல்லுறவு ஏற்பட வேண்டும் என்பதில், அவருக்கு உண்மையிலேயே நல்லெண்ணம் இருக்குமானால், அவர் இப்பொழுது திருவாய் மலர்ந்தருளிய உபதேசத்தை, மேலும் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே செய்ய முன்வந்திருக்க வேண்டும். ஆனால், உத்தியோகம் பெறுவதையே தங்கள் பிறவிப் பயனாகக் கொண்டு, உத்தியோகத் துறைகளில் எல்லாம் வேட்டையிட்டு நிரம்பிக்கொண்டு, அங்கு மற்றவர்களை நெருங்கவும் விடாமல் விரட்டிவிரட்டி அடித்துக்கொண்டிருந்த அக்கிரமச் செயலை, மனமுவந்து ஆதரித்து நின்றதோடு, அதன் எதிரொலியாகப் பிறரிடம் தோன்றிய உரிமை வேட்கையை, உத்தியோக வேட்கை—அதிகார மோகம்—வகுப்புவாதம் என்றெல்லாம் வசை பாடிக்கொண்டும் இருந்தார்.

உத்தியோகத் துறை உள்ளிட்டு எல்லா வாழ்க்கைத் துறைகளிலும், பார்ப்பனக் குடிமக்களோடு, பிற குடிமக்கள் பலமாகப் போட்டியிட்டு, அவர்களை வீழ்த்தி வெற்றி காணும் ஒரு சூழ்நிலை இன்று நாட்டில் உருப்பெற்றிருக்கிறது. "தற்போதைய நிலையில் ஆரம்பப் பள்ளியிலிருந்து மேல் படிப்புப் படிக்கும் 40 சதவிகிதத்தினரிலும் ஏதாவது ஒரு நிலையான பிழைப்பில் அமர்ந்தவர்கள் சொற்பம். மிகப் பெரும்பாலானவர் வேலையின்றி, அல்லது வேலை கிடைத்தும் காலட்சேபத்திற்குப் போதிய ஊதியமின்றி அல்லலுறுவது அனைவருக்கும் தெரியும். பழைய தலைமுறையினர் பயின்றதும் அநேகமாக இதே கல்வித்துறையினும், அப்போது படித்தவர்களின் தொகைக்கும், சர்க்கார் உத்தியோகங்களின் எண்ணிக்கைக்கும் அதிக வேறுபாடில்லை. இப்போது மாணவர்களின் தொகை பெருகிவிட்டது; அதற்குத் தக்கவாறு உத்தியோகங்கள் பெருகவில்லை," —ந் தேதி 'சு. மி'—த்தில் வந்துள்ள ஆய் [illegible] இலிருந்து [illegible] க்கிவிட்ட [illegible] மன்ற [illegible] சிரியரான சீனிவாசனுக்குக் கொடுத்திருக்கிறது. அதனால் முன்னைக் காட்டிலும் அதிகமான பேர் கல்வி கற்கத் தொடங்கிவிட்டார்கள்; படித்தவர்கள் அனைவருக்கும் உத்தியோகம் கிடைப்பதில்லை; படித்துள்ளவர் தொகைக்கேற்ப சர்க்கார் உத்தியோகங்களின் எண்ணிக்கை பெருகவில்லை; சொற்பமானவர்களுக்குத் தான் உத்தியோகம் கிடைக்கிறது; கிடைக்கும் உத்தியோகத்தில் கிடைக்கப்பெறும் ஊதியமும் வயிற்றுக்குப் போதியதாக இல்லை—என்ற குறிப்பிட்ட விஷயத்தின் நிலவரத்தை நன்கு தெரிந்துகொண்டுள்ள காரணத்தால் தான், சீனிவாசன், உருப்படியான நல்ல பயனைப் பெறுமளவுக்கு பிற குடிமக்களின் வெறுப்புக்கும் பார்ப்பன மக்கள் பலியாக வேண்டும் என்ற உபதேசத்தைச் செய்யக் கிளம்பி இருக்கிறார் என்பது விளக்கமாகிவிட்டது.

ஒருகாலத்தில் இருந்தது போல, நல்ல வருவாயும் பெரும் செல்வாக்கும் தருவதாக சர்க்கார் உத்தியோகங்கள் இப்பொழுதும் இருக்குமானால், உத்தியோகம் பெறுவதையே தங்கள் கடமையாகக் கருதி பார்ப்பனர்கள் இன்றும் அதை உத்தியோக வேட்டையில் ஈடுபட முனைவார்களானால், அதைத் தாம் தடுப்பதற்கு பதிலாக, அதைக் கைவிடக் கூடாது எனக் கூறவும் சகலமும் கற்றோர் சீனிவாசன் என்பது, தற்சமயம் அவர் புரிந்த உபதேசமும், சென்ற காலத்தில் அவர் மேற்கொண்டு ஒழுகிய முறையும் அம்பலமாக்கிவிட்டது. இன்று, சர்க்கார் உத்தியோகங்களின் எண்ணிக்கை பெருகவில்லை; படித்தவர் தொகை பெருகிவிட்டது; போட்டி பலமாகிவிட்டது; எனவே, இனி அத்துறை விதைக்காது அறுக்கும் நிலமாக இருக்காது என்பதை சரியாக உணர்ந்துகொண்ட சீனிவாசன், தனது சமூக மக்களின் எதிர்கால வாழ்வு உயர புதுவழி காண ஆசை கொள்ளுகிறார். அந்தக் கவலை அவர் உள்ளத்தைக் குடைகிறது. எனவே, பார்ப்பனக் குடிமக்கள் உத்தியோக ஆசைக்குத் தலைமுழுக்குப் போட்டுவிட்டு வியாபாரத் துறையில் குதிக்க வேண்டுமெனக் கோருகிறார்.

வியாபார வளர்ச்சிக்கு, பெரும்பான்மையினரான பிற மக்களின் அதிருப்தியும், அருவெறுப்பும் தடைகளாக இருக்கும். எனவே, அரசாங்க சர்க்கார் உத்தியோக வேட்டையின் காரணமாகத், தம்மீது மற்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பைக் களைந்து கொள்ளும் முறையை, பார்ப்பனர்களின் வர்த்தக வளர்ச்சிக்கு ஒரு திட்டமாகக் குறிப்பிடுகிறார் சீனிவாசன். 'சமுதாயமொத்த ஜனத்தொகையில், மூன்று சதவிகிதத்தினராக உள்ள பிராமண சமூகத்தார் தங்களுக்குள் ஒரு சங்கம் அல்லது கட்சி அமைத்துக்கொண்டு தங்கள் தங்கள் உரிமைகளை, சமுதாயத்தில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முகமதியர்கள் அடங்கிய 97 சதவிகித ஜனத் தொகையினரான பிராமணரல்லாதவர்களை எதிர்த்துப் பெற முயற்சிப்பது சாத்தியமல்ல' என்று சீனிவாசன் யோசனையின் மூலம், பார்ப்பனக் குடிமக்கள் தங்கள் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ள வேண்டிய தந்திரத்தையும் சுட்டிக் காட்டியுள்ளார். அதாவது, 'பெரும்பான்மையினராக உள்ள மக்களை, சிறுபான்மையினரான பார்ப்பனர் தங்களுக்கென ஜாதிச் சங்கமும்' கட்சியும் வைத்துக்கொண்டு, எதிர்த்து வாழ்வு தேடுவது என்பது முடியாது; எனவே, அதை விட்டுவிடுங்கள்' என்று சீனிவாசன் சாடையாகக் கூறுகிறார். அப்பொழுதுதான் பார்ப்பனர்களால் நடத்தும் பெரும் தொழில்களுக்கு மற்ற மக்களின் ஆதரவு பெருகும் என்பது அவருடைய நம்பிக்கை. பெரும்பான்மையினரை எதிர்த்துப் போரிட்டு சிறுபான்மையினர் தங்கள் உரிமைகளைக் காத்துக்கொள்ளுவதும் முடியும் என்ற நிலை இருக்குமானால், அவ்வடியே பார்ப்பனர்கள் நடந்துகொள்ள வேண்டுமென போதனை புரியவும் சீனிவாசன் பின்வாங்கி இருக்கமாட்டார். சீனிவாசன் உள்ளம், அந்தப் பண்பாட்டில் உருவாகி உறுதி பெற்றிருக்கும்தான்!

ஜாதி உயர்வு - தாழ்வை மறந்து, மற்றவர்களையும் ஒரே குலத்தவர் எனக் கொண்டு, தொழில் துறையில் புகுந்து நல்வாழ்வு பெறுங்கள் என்ற சமத்துவ போதனையை—சமரச சன்மார்க்கத்தை—அறநெறியை, தனது குடிப்பிறந்த மக்களுக்குக் கூறவேண்டுமென்ற பெருநெறி சீனிவாசனுக்கும் படவில்லை. என்றும் போல ஆரிய தந்திரத்தையே மேற்கொள்ளுமாறு, சுய ஜாதி மக்களுக்கு அறிவுரை கூறுகிறார் அந்த ஆசிரியர்.

அவர் கூற்றுப்படி, அதாவது, 'கால மாறுபாட்டின் விளைவாக சமீப காலத்தில் பிராமண சமூகத்தார், சென்னை ராஜ்யத்தில் மிக்க அரசாங்க உத்தியோகங்களில் அதிகமாக இடம் பெற்றது இதர சமூகத்தினரின் அசூயைக்கும், வெறுப்புக்கும் காரணமாக இருந்தது. பிராமணர் — பிராமணரல்லாதார் பிணக்கு வடநாட்டில் காணப்படவில்லை; தென்னிந்தியாவில் தான் இது காணப்படுகிறது' என்ற சீனிவாசனின் கூற்று, உண்மைதான் என்பதை ஒப்புக்கொள்ளும். மற்ற பெரும்பான்மை மக்களிலும் தாங்கள் தனித்ததொரு உயர்கூட்டம் என்ற நினைப்போடு, சீனிவாசன் விருப்பப்படி தொழில் துறையை பார்ப்பன இனத்தவர்கள் மேற்கொண்டபோதிலும், உத்தியோகத் துறையை அவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டதால், அவர்கள்மீது மற்றவர்களுக்கு ஏற்பட்ட அருவருப்பும், வெறுப்பும்போலவே, இந்த போக்கிலும் மற்றவர்களுக்கு அவர்கள் மீது வெறுப்பு ஏற்படத்தானே செய்யும்? துறை தான் மாறிற்றேயல்லாது, உள்ள போக்கு ஒன்றுபோலத் தானே இருக்கிறது? எனவே, எதிர் பலனும் ஒன்றுபோலத் தானே இருக்கும்? தர்க்க ரீதியாக இம்முடிவுக்குத் தானே ஒருவர் வரவேண்டி இருக்கிறது? இந்த விஷயம் சீனிவாசனுக்கும் தெரியும்!

தெரிந்தும், கூறுகிறார் என்றால், பார்ப்பனர்-அல்லாதார் வேற்றுமையைப் போக்கி, நட்புறவைத் தோற்றுவிக்க வேண்டுமென்பதல்ல சீனிவாசனுக்குள்ள ஆசை என்பது வெட்டவெளிச்சமாகிறது. பின் என்னவோ என்றால், சர்க்கார் உத்தியோகங்களையே நம்பியிருந்த பார்ப்பனக் குடிமக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து, அவர்களைத் தூக்கிவிட்டு, எதிர்கால வாழ்விற்கு வழிகாட்ட வேண்டுமென்பதுதான் சீனிவாசனின் உட்கருத்து [illegible]!

எனவே, சீனிவாசன் திட்டத்தில், பார்ப்பனருக்கு [illegible] தேட்டம் வாய்ப்பு இருக்கும் அளவிற்கு, அவர் விளக்கப்படி கேடு சூழும் வாய்ப்பும் அடங்கி இருக்கிறது என நாம் எவரும் முடிவு கட்டுவர்.

ரொடீஷியாவில் இன வெறி!

—(:)—

அரசியலமைப்பு காற்றில் பறக்கிறது!

இனவெறி ஏதும் இல்லாது எல்லோருக்கும் சமத்துவம் அளிக்கும் நோக்குடன் சென்ற ஆண்டு செப்டம்பரில் துவங்கிய ரோடீஷியா, நியாசலாந்து ஆகிய நாடுகளின் கூட்டாட்சி, தனது சுய உருவைக் காட்டத் துவங்கிவிட்டது. இந்த நாடுகளில் மிகப் பெரும்பான்மையாக வாழும், ஆப்பிரிக்க ஆசிய மக்களுக்கு சமநீதி வழங்க ரோடீஷியப் பாராளுமன்றம் மறுத்துவிட்டது. இவர்கள் நாட்டின் 98 சதவிகித மக்களாவர்.

இந்த ஆண்டு ஜூலையில் ரொடீஷியப் பாராளுமன்றத்தில் டி. எல். யம்பா என்னும் உறுப்பினர், உடனே எல்லா இன மக்களுக்கும் சமநீதி வழங்க வேண்டுமென்றும், பொது இடங்களில் சமத்துவம் நிலவ சட்டசபை தனது அதிகாரத்தைப் பிரயோகிக்க சட்டமியற்ற வேண்டுமென்றும் மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார். இந்த மசோதாவை ரொடீஷியப் பாராளுமன்றம் நிராகரித்துவிட்டது.

இதை எதிர்த்துப் பேசிய முதல் அமைச்சர் ஜியாபரி ஹகின்ஸ் "கூட்டாட்சியின் பகுதிகள் இங்கே உள்ள எல்லா மக்களுக்கும் சம உரிமை உடைய பகுதிகள் என்று கூறும், அரசியல் சட்ட அமைப்புகள் நம்மீது கட்டாயமாகத் திணிக்கப்பட்டது ஒன்றாகும்; ஐரோப்பிய பொதுமக்கள் அசுத்தம் பிடித்தவர்களுடன் ஒரே வரிசையில் நிற்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது" என்று குறிப்பிட்டார்.

முடிவு காணும் பொறுப்பை எங்களிடம் தந்துவிடுக!

இலங்கை இந்தியர் பிரச்சினைக்கு தொண்டமானின் பரிகாரம்

"இலங்கை இந்தியர் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு காணும் பொறுப்பை இலங்கை சர்க்காரிடமும், இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியிடமும் தந்துவிட்டால் போதும்," என்று, சென்னையில் நிருபர்களுக்களித்த பேட்டி ஒன்றில், இலங்கை ஜனநாயகக் காங்கிரசுக் கட்சித் தலைவர் தொண்டமான் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:- 'இந்திய சர்க்கார் அளிக்கும் உதவியை வரவேற்கிறோம்; ஆனால் இந்தப் பிரச்சினையில் நாங்கள்தான் சம்பந்தப்பட்டவர்கள்; ஆகவே, இவ்விஷயத்தில் எங்களுக்கும் பங்கு உண்டு''

குடியுரிமை கோரும் மனுக்கள் பற்றி அவர் குறிப்பிட்டதாவது:- "இலங்கை சர்க்காருக்குத் தங்களுடைய குடிகள் யாரென்பதை நிர்ணயிக்க உரிமை உண்டு; ஆரம்பத்தில், குடியுரிமை கோரப்பட்ட மனுக்களில் 45 சதவீதம் ஏற்றுக் கொள்ளப்பட்டன; ஆனால் டில்லி ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகுதான் 15 சதவிகிதத்திற்கும் குறைவாகக் குடியுரிமை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன; இலங்கை சர்க்கார் இப்போது குடியுரிமை கோரும் பெரும்பாலான மனுக்களை நிராகரிக்க பற்பல வழிகளைக் கையாளுகின்றனர்.

"டில்லி ஒப்பந்தத்தை ஆதாரமாகக் கொண்டோ, அல்லது 'நாடற்றவர்கள்' விஷயத்தை மட்டும் வைத்துக்கொண்டோ, இ. பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. ஏற்கனவே இந்தியக் குடிகளாகப் பதிவு செய்துகொண்டவர்களையும், இனிமேல் பதிவு செய்யவிருப்பவர்களையும் கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவுக்கு அனுப்ப திட்டம் ஒன்று வகுக்கப்படவேண்டும். அதே நேரத்தில், ஏற்கனவே இந்தியக் குடிகளாகப் பதிவு செய்துகொண்டவர்கள் இலங்கையில் குறைந்தது 25, 30 ஆண்டுகளாவது வேலை செய்திருப்பவர்களானதினால் அவர்களுக்கு நஷ்டஈடும், 'பிராவிடண்டு'ம் கொடுப்பது பற்றியும் கவனிக்கப்படவேண்டும்; எந்த முறையில் வெளியேறுபவர்கள் திருப்பி அனுப்பப்படவேண்டும் என்பது பற்றியும் முடிவு செய்ய வேண்டும்."

மேலும் அவர், "டெல்லி ஒப்பந்தம் பயனற்றதாகிவிட்டதால், அதை ரத்து செய்துவிடலாம்," எனவும் கூறியுள்ளார்.

சேரிகளை ஒழித்துக் கட்டுக!

நஷ்டஈடு தேவை இல்லை

பண்டிதர் கருத்து!

பம்பாய் மேயர், சேரி அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கம் அதிகமான பண உதவி செய்ய வேண்டுமென பண்டித நேருவிடம் கேட்டுக்கொண்டார். அதற்குப் பண்டிதர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? "சேரிகளை எல்லாம் ஒழித்துக் கட்டுங்கள்; சேரிகளை நடத்துபவர்களைத் தண்டியுங்கள்; என்று

(4-ம் பக்கம் பார்க்க)

மனச்சாட்சியைவிட மந்திரி பதவி பெரிதல்ல!

மந்திரி பதவியை ராஜினுமாச் செய்தது குறித்து கிரி

சென்னை, அக். 7—

"பிரான்ஸ் நாட்டில் ஒரு நாளைக்கு ஒரு மந்திரிசபை மாறுகிறது; தினம், தினம் பல மந்திரிகள் பதவி இழக்கின்றனர்; ஆனல், இந்த நாட்டின் அதிகாரத்திலிருக்கும் சிலர் தங்கள் வாழ்நாள் பூராவும், மந்திரி பதவி வகித்து, மந்திரியாகவே சாக ஆசைப்படுகின்றனர்; இது இந்தியாவின் துரதிருஷ்டமாகும்."

"மந்திரி பதவி என்பது மலர் தூவிய படுக்கை அல்ல; ஒருவர் நினைக்கும் கொள்கைகள், திட்டங்கள் நிறைவேறுமல் போனல், பயன்படக்கூடிய முறையில் மக்களுக்கு சேவை செய்ய முடியவில்லையே என்ற உணர்வு மேலிட்டால், அந்தக் கணமே தான் வகிக்கும் மந்திரி பதவியை ராஜினுமாச் செய்வதுதான் நேர்மை; நியாயம்."

"தொழிலாளருக்குப் பயன் தரத்தக்க வகையில் சேவை செய்ய இயலாது போய்விட்டதே என்று என்னுடைய மனச்சாட்சி என்னை உறுத்தியதால்தான், நான் பதவியை ராஜினுமாச் செய்தேன்,"

இவ்வாறு, அண்மையில் இந்திய அரசாங்க தொழிலாளர் மந்திரி பதவியை ராஜினுமாச் செய்துவிட்டு வந்துள்ள திரு வி. வி. கிரி தனக்குத் தரப்பட்ட வரவேற்புக் கூட்டமொன்றில் கூறினர்.

நட்சத்திரங்களை நம்பும் மனிதர்கள்!

ஜோதிடர்களை நேரு கண்டிக்கிறார்?

பம்பாய், அக் 7—

மத்திய தொழில் நிலையத்தின் கல்லூரி விழாவில் பேசுகையில், பண்டித நேரு, நட்சத்திரங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்.

"பல இந்தியர்கள், 'அதிசயங்கள் நடைபெறுவது இன்னும் தீர்ந்துபோகவில்லை,' என்று நம்புகிறார்கள். தங்களுக்குத் தேவையானவற்றைச் செய்துகொள்ள இயலாத அவர்கள், தங்களுக்கென அமைந்துள்ள நட்சத்திரங்கள் (கிரகங்கள்) செய்துமுடிக்கும் என்று நம்புகிறார்கள்; நம்மீது நட்சத்திரங்களுக்கு ஏன் இவ்வளவு கவலை என்று என்னுல் புரிந்துகொள்ள இயலவில்லை" என்றார்.

"இப்போது பண்டிதர்களுக்கும், ஜோதிடர்களுக்கும், நல்ல காலம் என்று கூறும் வகையில், இப்போது, யாருக்கும் நன்மை செய்யாத தீங்கான விசுவாசம் வருத்தத் தக்கது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

கைத்தொழில்களுக்கு இந்திய சர்க்கார் உதவி!

சென்னைக்கு எதும் இல்லை!

இந்திய சர்க்கார் குடிசைத் தொழில்களின் அபிவிருத்திக்காகப் பல மாகாண சர்க்கார்களுக்கு மீண்டும் மானியமாகவும், கடனாகவும் உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

அகில இந்திய காதி போர்டுக்கு 26 லட்சம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, காதி போர்டில் உறுப்பினராகியுள்ள காதி நிலையங்களுக்குக் கடன் அளிப்பதற்கும் பொருட்டு தரப்பட்டிருக்கிறதாம்.

சிறு கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக 'சி' பிரிவு மாநிலங்களுக்கு இந்திய சர்க்கார் ரூ 17 81,000 ஒதுக்கியுள்ளனர் என்று தெரிகிறது.

இத்தொகையில் டில்லிக்கு ரூ. 10 லட்சம், விந்திய பிரதேசத்திற்கு ரூ $3\frac{3}{4}$ லட்சம் அஜ்மீருக்கு ரூ 1 லட்சம், திரிபுராவுக்கு ரூ 69,000, கட்ச் பிரதேசத்திற்கு ரூ 57 000, போபால், ஹிமாசல பிரதேசம், கூர்க், மணிப்பூர் ஆகியவைகளுக்கு ரூ 40,000 ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

ராஜஸ்தானுக்கு ரூ 61,710 மானியமளிக்கப்பட்டிருக்கிறது. டின்ஸ்மிதியில் உள்ள மின்சார வெல்டிங் தொழிற்சாலையை நடத்த ராஜஸ்தானுக்கு ரூ 48,000 கடன் அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

தோல், செருப்பு ஆகிய தொழில்களின் முன்னேற்றத்திற்காக ராஜஸ்தானுக்கு ரூ 24,000 கடனுகவும், ரூ 21,150 மானியமாகவும் தரப்பட்டிருக்கிறது.

டில்லிக்கு ஒரு லட்சம் ரூபாய் கடனும், நீக்குச்சித் தொழிற்சாலை நடத்தும் கூட்டுறவுத் தொழில் நிலையத்திற்கு ரூ 15,000 மானியமும் தரப்பட்டிருக்கிறது.

மத்திய பாரதத்தில் உள்ள மரத் தொழிலை அபிவிருத்தி செய்ய இந்திய சர்க்கார் ரூ 78 500 மானியம் அளித்திருக்கின்றனர்.

இரும்பு உருக்குதல், தச்சு ஆகிய தொழில்களை அபிவிருத்தி செய்ய ஒரிசா மாகாணத்திற்கு ரூ 20,000 கடன் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆந்திராவில் கண்ணுடி மணிகள் செய்யும் பயிற்சி நிலையமொன்றை அமைக்க ரூ 4,750 மானியம் அளிக்கப்பட்டிருக்கிறது.

அகில இந்திய கைத்தொழில் போர்டுக்கு பொருட் காட்சிசாலைக்கு வேண்டிய பொருள்களை வாங்க ரூ 25,000 மானியம் அளித்துள்ளனர்.

மேற்கு பெர்லின் நகர தேர்தல்

கம்யூனிஸ்டுகளும் கலந்துகொள்ள உரிமை!

லண்டன், அக். 7—

மேற்கு பெர்லின் நகர அரசாங்கம், கிழக்கு ஜெர்மனியை கம்யூனிஸ்டு கட்சிக்கு டிசம்பரில் நடைபெறும் மேற்கு பெர்லின் நகரத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முழு உரிமையும் தருவதாக அறிவித்துள்ளது.

இது பற்றி அரசாங்கம், கிழக்கு ஜெர்மானிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கு பெர்லினில் உள்ள இதர கட்சிகளைப் போலவே, மேற்கு ஜெர்மானி அரசியல் சட்டப்படி, கம்யூனிஸ்டுகளும் தேர்தலில் கலந்து கொள்ளும் இத உரிமையைப் பெற்றிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

சின்னுட்களுக்கு முன் அங்குள்ள சுதந்திர ஜனநாயகக் கட்சியினர் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என வற்புறுத்தி வந்தனர். ஆனல் அவர்களது கோரிக்கையை மக்கள் சபையிலிருந்த கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியினரும், சமுதாய ஜனநாயகக் கட்சியினரும், எதிர்த்ததின் விளைவாக கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்படாதிருந்தது.

இதுபற்றி இன்று விவாதித்தபொழுது, அரசாங்கம், "கம்யூனிஸ்டுகள் தேர்தலில் கலந்துகொள்ளுவதற்கு அவர்களுக்கு சட்டப்படி உரிமை இருப்பதுடன், எல்லோருக்கும், சுதந்திரமாக பேசவும் எழுதவும் உரிமை தருவது மேற்கு பெர்லின் அரசியல் இலட்சியங்களாகும்" என்று கூறியது. அதன் பிறகே கம்யூனிஸ்டு கட்சியினரும் தேர்தலில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பிளவுபட்ட ஜெர்மனி ஒன்முக இணையுமா?

நான்கு வல்லரசுகள் மாநாடு நடைபெறும்?

மேற்கு — கிழக்கு ஜெர்மனி பற்றி மீண்டும், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நான்கு வல்லரசுகளும், மகாநாடு கூட்டிப் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும் என்று ரஷ்ய அயல்நாட்டு மந்திரி மாலடோவ் கோரியிருப்பதாகத் தெரிகிறது.

மேற்கு ஜெர்மனியிலிருந்தும், கிழக்கு ஜெர்மனியிலிருந்தும், வல்லரசுகள் தங்கள் தங்கள் இராணுவப் படைகளை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும், இவ்விதம் செய்வதற்கு வல்லரசுகள் ஒப்புக்கொண்டால் ஜெர்மனி பருவட்ட நிலை அபிவிருத்தியடைந்து, ஜெர்மனியின் இரு பிரிவினருக்குமிடையே ஒற்றுமை ஏற்பட நல்லதோர் சூழ்நிலை ஏற்படும் என்றும் அவர் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

கழகச் செய்திகள்

சிவகெங்கை தி. மு. க.

3—10—54 இரவு $9\frac{1}{2}$ மணிக்கு சிவகெங்கை நகர் தி. மு. கழகச் செயற்குழு தேர்தல் கூட்டம் தோழர் இரா. தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோ. மனவாளன், செயலாளராகவும், தி. சோமசுந்திரம் துணைச் செயலாளராகவும், ச. வெள்ளைசாமி பொருளாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாக கச்சிஞர்க்கினியனும், செயற்குழு உறுப்பினர்களாக இரா. தியாகராசன், இரா. கணு, இ. கணபதி, வே. முத்தையா, வி. சிவப்பிரகாசம், கோவிந்தன், எஸ். காதர் ஆகியோர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. திருவாங்கூர் தமிழர்களை சுட்டுத்தள்ளியப்பட்டம் தாணு சர்க்காரை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது

கோவை தி. மு. கழகம்

3—10—54 காலை 10 மணி அளவுக்கு கோவை 30-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் திராவிட நாடு பிரிவினை விழா, தோழர் கண்ணன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் வணங்காமுடி கழகக் கொடியேற்றுவித்தார். தோழர்கள் வணங்காமுடி, மணிபாண்டி, வேஞ்சேரன், திருமூர்த்தி ஆகியோர் திராவிடநாடு பிரிவினையின் அவசியம் பற்றி விளக்கிப் பேசினர்.

மறுப்பு

"தஞ்சை ஜில்லா போர்டு தேர்தலில் ஒரத்தநாடு, கந்தர்வக்கோட்டை, காவாலிப்பெட்டித் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் அபேட்சகர்களை (இரட்டை அங்கத்தினர் தொகுதி) ஒரத்தநாடு திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிப்பதாகவும், 5—10—54-ல் நடக்கவிருந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதாகவும், ஒரத்தநாடு காங்கிரஸ் கமிட்டியினரால் துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருப்பது தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், மேற்படி தேர்தலில் ஒரத்தநாடு தி. மு. கழகம் எந்த அபேட்சகர்களையும், ஆதரிக்கவில்லை என்பதையும் பொது மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்," என்று, ஒரத்தநாடு தி. மு. கழக செயலாளர் ஆர் செல்வராஜன் அறிவிக்கிறார்.

சென்னை 4-வது வட்ட தி. மு. கழகம்

3—10—54 மாலை 3 மணியளவில் தோழர் த. சேதுராசன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், 4-வது வட்ட தி. மு. கழக இல்லத்தை, 9, இன்ஸ்பெக்டர் சுப்பராயலு சாயுபு தெருவில் அமைப்பதென்றும், 'தியாகராயர் மறுமலர்ச்சி மன்றத்தை 'தியாகராயர் மறுமலர்ச்சி நூல்நிலையம்' என்றமைத்து சென்னை 4-வது வட்ட தி. மு. கழகமே ஏற்று நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

அன்று மாலை 7 மணிக்கு தியாகராயர் மறுமலர்ச்சி மன்ற நிலையத்தில் தோழர் ஏ. எம். முத்தையா தலைமையில் நடைபெற்ற திராவிட நாடு பிரிவினை விழா நிகழ்ச்சியில், தோழர்கள் செல்வராசு, இளந்தமிழன், அப்துல் ரஹீம், துரைராசன், உலகநாதன், இராசு ஆகியோர் திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியம்பற்றி விளக்கமாகப் பேசினர்.

பட்டிவீரன்பட்டி (கிளை) தி. மு. கழகம்

1—10—54ல், இவ்வூர் நிதிரா டாக்கீசில், தோழர் மீனாட்சிசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்; டி. என். என்; மீனாட்சிசுந்தரம்; துணைச் செயலாளர்: எம். நல்லபெருமாள்; பொருளாளர்: எம். மல்லன்; விளம்பர உறுப்பினர்: எம். நடராசன்; மாவட்டக் குழு உறுப்பினர்: பி செயப்பிரகாசம்.

வெங்கடேசநல்லூரில் தி.மு.க. பொதுக்கூட்டம்

26—9—54ல், தோழர் கு. இரகுராமன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் என். ஆர். முருகையன் கழகக் கொள்கைகள் பற்றியும், திராவிட நாடு பிரிய வேண்டிய அவசியம் பற்றியும் விளக்கிப்பேசினார். பின்னர், காஞ்சி—கல்யாணசுந்தரம் குமாரர் மறைவுக்கும், திரு—தமிழர் போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்களுக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

ஒரத்தநாடு தி. மு. கழகம்

27—9—54ல், தோழர் சா. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், தமது சொந்த அலுவல்கள் காரணமாகச் செயலாளர் பதவியிலிருந்து விலகிக்கொண்ட தோழர் மா. செல்வராசுவின் விலகுதல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவருக்கு பதிலாகத் தோழர் ஆர். வெங்கடராசனை செயலாளர் பதவிக்குத் தேர்ந்தெடுத்தும், ஒரத்தநாட்டில் ஒரு தாலுகா நீதிமன்றம் அமைக்க அரசியலாரைக் கேட்டுக்கொள்வதும், வருகிற நவம்பர் திங்களில் கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானித்து முடிவு செய்யப்பட்டது.

சோழபுரம் தி. மு. க.

4—10—54 மாலை 8 மணிக்கு தோழர் என். கே. பத்மநாபன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், செயலாளர் தோழர் என். கே. பத்மநாபன் விலகுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருக்குப் பதிலாகத் தோழர் சேகரசன் புதிய செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரெஞ்சிந்திய எதிர்காலம்

உடன்பாடு ஏற்பட்டு விட்டதாம்!

பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் எதிர்காலம் பற்றி இந்தியா, பிரான்ஸ் ஆகிய சர்க்கார்களுக்கிடையே புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் முடிவேற்பட்டு விட்டதாகவும் அதிகார மாற்றத்திற்கான இடங்கள் அனைத்தும் வருக்கம் கண்டதாகவும் தெரிகிறது.

தற்போதைய ஏற்பாடுகளின்படி கீழூர் கிராமத்தில் பிரெஞ்சு நீதிபதி ஒருவர், இந்தியத் தூதுவர், பியர்ரி லாண்டி ஆகியோர் மேற்பார்வையில் பிரெஞ்சிந்திய நகரசபை உறுப்பினர்கள், இணைப்பிற்கு வாக்களிப்பு செய்வர் என்று தெரிகிறது.

இந்திய சர்க்காரின் சார்பில் கமிஷனர் ஒருவர் உடனடியாக பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் அதிகாரப் பொறுப்பை ஏற்பார். கமிஷனருக்கு உதவியாக ஒன்பது பேர் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றும் நியமிக்கப்படுமாம்.

இந்த இடைக்கால அரசாங்கம் ஒரு ஆண்டு காலம் பதவியில் இருக்குமென்றும் இறுதியில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறும் என்றும் தெரிகிறது.

இப்போது ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி, புதுவையில் உள்ள கல்லூரியை பிரெஞ்சு சர்க்கார் நடத்துமென்றும், மற்ற கல்வி நிலையங்களை இந்திய சர்க்கார் நடத்துமென்றும் தெரிகிறது.

அதிகார மாற்றம் நடைபெற்ற பின்னர் இப்போதுள்ள பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய போலீஸ் அதிகாரிகள் மேற்கொள்வர் என்று தெரிகிறது.

மிராசுதாரரால் படுகாயப்பட்ட கழகத் தோழர்!

— (:) —

நாடகம் நடத்தியதே காரணமாம்!

புகாரை ஏற்றுக் கொள்ள மறுக்கும் போலீசாரின் விசித்திரப் போக்கு!

மாவட்ட போலீஸ் அதிகாரியிடம் முறையீடு

கவண்டம்பட்டியில் சம்பவம்!

திருச்சி, அக். 7—

திருச்சி குளித்தலை தாலுகாவைச் சேர்ந்த கவண்டம்பட்டி தி. மு. கழகத் தோழர் அங்கமுத்து என்பவர் அவ்வூரைச் சேர்ந்த மிராசுதார் மாணிக்கம் என்பவரால் தாக்கப்பட்டதினால் படுகாயமுற்றதாகத் தெரிகிறது.

தோழர் அங்கமுத்துவின் சார்பில் குளித்தலை போலீசாரிடம் நமது தி. மு. கழகச் செயலாளர் க. முத்து அவர்கள் புகார் செய்தபோது போலீசார் புகாரை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனராம்.

சென்ற மாதத்தில் கவண்டம்பட்டி தி. மு. கழகத் தோழர்கள் ஓர் சீர்திருத்த நாடகம் நடத்தியிருக்கின்றனர் என்றும், நாடகம் விவசாயப் பிரச்சினையைக் கொண்டதாயிருந்ததால் தென்னகைக் குடிச்சி மிராசுதாரும், பெரும் நிலப்பிரபுக்களின் கையாளுமான திரு மாணிக்கம் என்பவர் அந்த நாடகத்தில் நடித்த கழகத் தோழர் அங்கமுத்து என்பவரை சில அடியாட்களுடன் வழிமறித்து வாய்க்கு வந்தபடி இழிந்தும் பழித்தும் பேசி தோழர் அங்கமுத்து மூர்ச்சையாகும் வரை அடித்து, அவரது தலையை கத்தியால் தாக்கி, இரத்தம் ஒழுகச் செய்து படுகாயப்படுத்தியிருக்கிறார் எனவும் தெரியவருகிறது.

பின் கவண்டம்பட்டி தி. மு. கழகச் செயலாளரான க. முத்து அடிபட்ட தோழரை 'டாக்டரி'டம் காட்டி, 'சர்டிபிகேட்' பெற்று குளித்தலை போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரிடம் புகார் செய்ததில் அந்த போலீஸ் அதிகாரி புகாரை ஏற்றுக்கொள்ள மறுத்தது மட்டுமின்றி தோழர்களை மிரட்டி வேறு அனுப்பியதாகவும் தெரிகிறது.

இதையறிந்த திருச்சி நகர தி. மு. கழகச் செயலாளர் எம். எஸ். மணி அவர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து சென்று விவரங்களை பதிந்துகொண்டு, திருச்சி ஜில்லா போலீஸ் அதிகாரியிடம் புகார் செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இலங்கை இந்தியர் பிரச்சினை

இருநாட்டுப் பிரதமர்களும் இன்று உரையாடுவர்!

புதுடில்லி, அக். 8—

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் பிரதமர்கள் இலங்கை இந்தியர் பிரச்சினை குறித்து நடத்தும் பேச்சு வார்த்தைகள், முன்னரே அறிவிக்கப்பட்டபடி நேற்று நடைபெறவில்லை. இன்றுதான் துவங்கும் என்று தெரிகிறது.

இரு பிரதமர்களும் பேசுவதற்காக, டில்லி, ஆகிய இரு நாட்டுக்கும் முழுமூச்சாக உதக்கம் பட்டுள்ளனர்.

நேற்று பிரதம மந்திரி பண்டித நேருவை இலங்கையின் முன்

ஜெர்மனி ஒன்றுபடவேண்டும்

அப்போதுதான் சமாதானம் நிலவும்

வி. கே. மேனன் கருத்து

ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில், உலக விவகாரங்கள் பற்றி இறுதியில் பேசுகையில், தோழர் வி. கே. கிருஷ்ண மேனன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இன்று ஜெர்மனியில் நிகழ்ந்துள்ளவை, யுத்த சமாதானமா என்பதை ஓரளவு நிர்ணயிக்கக் கூடும்.

ஆசியாவைக் காட்டிலும், சமாதானத்திற்கு ஆபத்து இன்று ஐரோப்பாவில் இருப்பதாகவே நாங்கள் எண்ணுகிறோம்.

உலக யுத்தங்கள் எல்லாம் ஐரோப்பாவிலேயே துவங்கியிருக்கின்றன.

ஜெர்மனி ஒரு கேந்திரமாக அமைந்திருக்கிறது.

தனது பூர்வீகத்தை விரிவுபடுத்திக் கொள்வதிலோ, அல்லது உள்நாட்டின் ஒற்றுமை காண்பதிலோ, எதிலேயாயினும் ஜெர்மனியின் நிலை, அதன் கடந்த ஒரு நூற்றாண்டு கால சரித்திரம் சொல்லுகிறபடி, குழப்பமாயும், யுத்தத்திற்கு இழுத்துச் செல்வதாயும்தான் அமைந்திருக்கிறது.

உலக யுத்தம் முடிந்து ஒன்பது ஆண்டுகளாகிவிட்டன; ஆயினும் இன்றுவரை ஜெர்மனியில் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்படவில்லை.

உலக சமாதானத்திற்கு ஜெர்மனியில் அமைதி நிலவவேண்டியது மிக அவசியமாகும். ஜெர்மனியில் அமைதி நிலவுவதற்கு உருவாகும் ஒற்றுமையைப் பொறுத்ததாகும்.

எனவே, மேற்கு—கிழக்கு ஜெர்மனியினுடைய இரண்டு அரசாங்கங்களிடையேயும் நேரடியான பேச்சுவார்த்தைகள் தொடங்கவேண்டும். பேச்சுவார்த்தைகள் எப்படி இருக்க வேண்டும் என நாங்கள் சொல்ல விரும்பவில்லை; ஆனால், ஜெர்மனியர், ஜெர்மானியர்களுடன் தங்கள் நாடு ஒன்றுபடவேண்டுமென்பதற்காக பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் அக்கறை யிருக்க முடியாதென எண்ணுகிறோம்!

நம் பிரதமர் டில்லி சேனநாயகா, எதிர்க்கட்சித் தலைவர் பண்டாரநாயகா, அருமைநாயகம் எம். பி., ஆகிய மூவரும் சந்தித்து உரையாடினர் எனத் தெரிகிறது.

இரண்டு நாட்களும் பேச்சுவார்த்தைகளில், இந்தியப் பிரதமருடன், வெளிநாட்டு காரியதரிசி என். ஆர். பிள்ளை, காமன்வெல்த் இலாகா காரியதரிசி எஸ். டட், இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் சி. சி. தேசாய் ஆகியோர்களைத் தொடர்வர் எனத் தெரிகிறது.

கழகக் கூட்டம்

★

திருமழிசை

தி.மு.க.முதலாண்டுவிழா

சேக்கை கோண்டான் மண்டபம்

தேதியில்

12-10-54 மாலை 5-30 மணிக்கு

தலைவர்:

டி. சண்முகம், எம். எல். ஏ.

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

சி. வி. எம். அண்ணாமலை

சேரிகளை....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் அவர் தந்த பதில்!

"சேரிகளை நடத்தி, மிக ஆபாசமான விதிகளை வாடகைக்குக் கொடுத்து, பணம் சுட்டும் சேரி முதலாளிகளைத் தண்டிக்க வேண்டும்; அங்கே வாழ்கிற மக்களுடைய அவமானத்திற்காக, இந்த சேரிகளை ஒழிப்பதற்காக சேரி முதலாளிகளுக்கு நஷ்டஈடு ஏதும் தரக்கூடாது; இங்கிலாந்து நாட்டில் ஒழிக்கப்படுகிற சேரிகளுக்கு நஷ்டஈடு தருவதில்லை; இந்த நாட்டில்தான் எதற்கெடுத்தாலும் நஷ்டஈடு தரும் நியதி வழக்கமிருக்கிறது" எனவும் பண்டிதர் அங்கலாய்த்துக்கொண்டார்!

அகமதாபாத் ஆலை தொழிலில்...

ரூ.510 லட்சம் நஷ்டமாம்

அகமதாபாத் ஆலைத் தொழில் கடந்த 1952, 53-ம் ஆண்டுகளில் சுமார் ரூ. 510 லட்சம் நஷ்டமடைந்திருப்பதாகவும், அதற்கான காரணங்களில், போதுமான உள்நாட்டு மார்க்கட் விலையாது போனதிலும் வெளிநாட்டுப் பருத்தியை உபயோகிக்க வேண்டியிருந்ததும் ஒன்று என்றும், தோழர் எஸ். பி. லால்பாய் என்ற அகமதாபாத் ஆலை முதலாளிகள் சங்கத் தலைவர், மத்திய வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியிடம் கூறியதாகத் தெரிகிறது.

நவீன இயந்திர சாதனங்களை அமைத்து, ஆலைகளில் சிக்கனச் சீரமைப்புச் செய்வதின் மூலம் துணியின் தரம் உயருமென்றும், பளபளப்பேற்ற மாதிரியாக, நவீன இயந்திரங்கள் பொருத்தப்படுமெனில் ஆலைத் தொழில் ஆட்குறைப்பு ஏற்பட்டு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமென பீதி கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது.

இரண்டு தெலுங்கு மாநிலங்கள் வேண்டுமாம்

இரண்டு தெலுங்கு மாநிலங்கள் வேண்டுமென்ற கோரிக்கையை, ஐதராபாத் மாநிலத்தில் உள்ள தெலுங்கர்களில் 100-க்கு 95 பேர் ஆதரிப்பதாக ஐதராபாத் விவசாய இலாகா மந்திரியும், முன்னாள் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவருமான தோழர் கே. வி. ரங்காரெட்டி அறிவித்தார்.

இரண்டு தெலுங்கு மாநிலங்களும்—இப்போதுள்ள ஆந்திர மாநிலம், இன்னும் ஐதராபாத், மத்திய பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் உள்ள தொடர்ச்சியான, தெலுங்கு பேசும் மாவட்டங்கள் ஆகிய பிரதேசங்களிலிருந்து உருவாக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உழைக்காதவர்கள் உதவாக்கரைகள்!

மூளை உழைப்பும் உடல் உழைப்பும் ஒத்த மதிப்புடையனவே!

பண்டித நேருவின் கருத்து

பம்பாய், அக். 7—

உழைக்காதவர்கள் எல்லாம் உபயோகமற்றவர்கள் என்று பண்டித நேரு குறிப்பிட்டார்.

மத்திய தொழிலாளர் கழகத்துக்கான கட்டிடங்கள் கட்டும் விழாவில் பேசுகையில் அவர், "உழைப்புக்கு மக்கள் மதிப்பளிக்க வேண்டும்," என்றார்.

"அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் ஒரு உலகத்திலும் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் வேறொரு உலகத்திலும் வாழவில்லை; நாம் இந்த மனப்பான்மையை மாற்ற வேண்டும். இது உயர்ந்தது, அது தாழ்ந்தது என்று எண்ணும் மனப்போக்கைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

"உழைக்காதவர்கள் எதற்கும் உதவாக்கரைகள்; உயர்ந்த வகுப்பினர் உடலுழைப்பு செய்யக் கூடாதென்று எண்ணுவது மிகவும் கீழ்த்தரமானதாகும்.

"நீங்கள் முன்னேற வேண்டும்; உடல் உழைப்பு மிகவும் அவசியமானது; ... இங்கு உயர்ந்த இடமில்லை.

"ஒவ்வொருவரும் அவரவர் செய்கிற வேலையின் அளவைப் பொறுத்து மதிப்பிடப்பட வேண்டும்.

"சிலர், தங்கள் மூளையால் உழைக்கிறார்கள்; சிலர், உடலால் உழைக்கிறார்கள்; இரண்டு உழைப்புக்கும் சிறிது வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது; ஆனால், இரண்டும், ஒன்றை ஒன்று தாழ்வாகவெண்ணக் கூடாது. எல்லோரும் சமமானவர்கள் என்ற எண்ணத்துடன் முன்னேற்றம் காண முயல வேண்டும்," என்றும் பண்டித நேரு குறிப்பிட்டார்.

"துறவறத்தைக் கைவிடமாட்டேன்!"

"தானம் செய்துவிட்ட ஜீவனை தேர்தலில் ஈடுபடுத்தமாட்டேன்"

அரசியல் துறவி ஜெயப்பிரகாஷ் உறுதி!

திருவனந்தபுரம், அக். 7—

"அரசியல் துறையிலிருந்து நான் வெகு அப்பால் போய்க் கொண்டிருக்கிறேன்; நான் மீண்டும் அரசியலுக்குத் திரும்புவேன் என நம்பவில்லை;

"இப்போது பி.—சோ. கட்சியில் நான் ஒரு சாதாரண உறுப்பினன்; கட்சி வேலையில், அதிலும் குறிப்பாகத் தேர்தல் வேலையில் ஈடுபட மாட்டேன்;

"நான் எனது வாழ்வை 'ஜீவதானம்' செய்து விட்டதால், கட்சி வேலைகளில் ஈடுபடுவது விலக்கப்பட்டிருக்கிறது"

என்று நிருபர்களிடையே பேசுகையில் திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறினார்.

காஷ்மீர் பிரச்சினை

பாக். பிரதமர் தரும் விளக்கம்

"காஷ்மீரில் உள்ள, 40 இலட்சம் மக்களும் தங்கள் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்; அதற்காக நடைபெறும் வாக்கெடுப்பின் போது இராணுவமே தேவையில்லை என்றேன், 'சட்டத்தையும், ஒழுங்கையும் காப்பதற்கு, இராணுவம் தேவை,' என்கிறது இந்தியா; அப்படியானால், காஷ்மீரில் இந்தியத் துருப்புகள் 18,000-மாக இருக்கட்டும், 'சுதந்திரக் காஷ்மீர்' அல்லது, 'ஆசாத் காஷ்மீரி'ல் 3 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரையில் பாகிஸ்தான் துருப்புகள் இருக்க வேண்டுமென கேட்டால் இந்தியா மறுக்கிறது."

என்று, பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி, அமெரிக்கப் பத்திரிகையாளரிடம் கூறிப்பிட்டு தொடர்ந்து கூறியதாவது:—

"மிகச் சிறிய வெளி நாட்டு நிலைமைகளை நாங்கள் பொறுமையின் இந்தியா பார்த்தும் இதிட்டு கேட்க விரும்புகிறது; பாகிஸ்தான் அதைச் சந்தேகிக்கிறது; காரணம் சிறிய நாட்டுப் பிரதிநிதி தகுதியையாளராக இருந்தால், மிகப் பெரிய நாடான இந்தியா அவரை எளிதில் செல்வாக்கால் வசப்படுத்தக் கூடும் என்று நாங்கள் நினைக்கிறோம்;

"இதைக் கூட நாங்கள் விட்டுக் கொடுக்கத் தயார்; ஆனால், மற்ற இரு விஷயங்களான (1) மக்கள் வாக்குப் பதிவு செய்வதில் நிர்ப்பந்தம் ஏதும் கூடாது; சுதந்திரமாக அவர்கள் வாக்களிக்க சந்தர்ப்பம் வேண்டும்; (2) காஷ்மீரில் உள்ள அரசாங்கம், முழுமையாக நடுநிலைமை வகிக்க வேண்டும் என்பதற்கும் இந்தியா சம்மதிக்கவில்லை; காரணம், காஷ்மீரின் ஒரு இந்திய பொம்மை மந்திரிசபை இருப்பதுதான்."

மேலும் ஒரு நிருபர் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையே நடைபெற்ற காஷ்மீர் பற்றிய கடிதப் போக்குவரத்தைக் காட்டி, 'இந்தியா பாகிஸ்தானைக் கண்டு பயப்படுவதாகத் தெரிகிறதே?' என்று கேட்டபோது, அலி கூறியதாவது:—

"இந்தியா மிகப் பெரிய நாடு; 38 கோடி மக்களைக் கொண்டது; பாகிஸ்தானோ மிகச் சிறிய நாடு; 7½ கோடி மக்களை மட்டுமே கொண்டது; மேலும், பாகிஸ்தானுக்கு ஆக்கிரமிப்பு ஆசை இல்லை; நாங்கள் இராணுவ உதவி பெற்றிருப்பதெல்லாம் எங்கள் நாட்டு எல்லையையும், சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்ள மட்டும்தான்; எனவே, அது குறித்து இந்தியா பயப்படத் தேவை இல்லை,"

... தன்னேற்றக் கழகத் ... தோழர் இரா. நெடுஞ்... அவர்க... அகத்தில் ... ஆகிய ... தொடுத்து ... இது ... இ. ...